# ரத்த தான இயக்கம்: ஆளுநர் தொடக்கி வைப்பு

சென்னை, ஆக.29: சென்னை முழுவதும் 50-க்கும் மேற்பட்ட இடங்களில் நடைபெறும் மாபெரும் ரத்த தான இயக்கத்தை ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் வியாழக்கிழமை தொடக்கி வைத்தார்.

அந்த இயக்கத்தின் வாயிலாக அடுத்த சில நாள்களுக்குள் 5 ஆயிரத்துக்கும் அதிகமான யூனிட் ரத்தம் தானமாகப் பெறப்பட உள்ளது. அவற்றைக் கொண்டு நாளொன்றுக்கு 100 அறுவை சிகிச்சைகள் நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

போரூர் ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவக் கல்வி ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் ரோட்டரி கிளப் சார்பில் இந்நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. அதற்கான முகாம்கள் அரசு மற்றும் தனியார் ரத்த வங்கிகள் ஒத்துழைப்புடன் நடத்தப்பட்டு வருகின்றன. முன்னதாக, போரூர் ராமச்சந்திரா மருத்துவமனை கலையரங்கில் நடைபெற்ற அதற்கான தொடக்க நிகழ்ச்சியில் ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் கலந்து கொண்டனர். அப்போது அவர் பேசியதாவது:

அனைத்து தானங்களைக் காட்டிலும் அதி முக்கியமாக தானமாகக் கருதப்படுவது ரத்த தானம்தான். ஏனென்றால், அந்த ஒரு தானத்தில் மட்டும்தான் ஏழை - பணக்காரன்; உயர்ந்தவன் - தாழ்ந்தவன்; ஜாதி - மதம் என எந்த வேற்றுமையையும் முன்னிறுத்த முடியாது. சமூகத்தில் அனைவரும் சமம் என்பதை சான்றுரைக்கும் தானம் அது.

ஒருவர் தானமாக அளிக்கும் ரத்தத்தின் மூலம் பலரது உயிர் காப்பாற்றப்படுகிறது. எனவே, அந்த சேவை முக்கியத்துவம் வாய்ந்த அந்த நற்பணியை மேற்கொள்ள அனைவரும் முன்வர வேண்டும். மருத்துவமனைகளும், ரத்த வங்கிகளும், ரத்தத்தை சேமிக்கும் போது, அவற்றை முழுமையாக பரிசோதித்து, அறிவியல்பூர்வமாக பாதுகாக்க வேண்டும் என்றார் அவர்.



ரத்த தான இயக்கத்தைத் தொடக்கி வைத்த ஆளுநர் பன்வாரிலால் புரோஹித். உடன் ராமச்சந்திரா மருத்துவக் கல்வி நிறுவனத்தின் துணைவேந்தர் டாக்டர் விஜயராகவன் உள்ளிட்டோர்.

நிகழ்ச்சியில், ராமச்சந்திரா மருத்துவக் கல்வி நிறுவனத்தின் துணைவேந்தர் டாக்டர் பி.வி.விஜயராகவன், ரோட்டரி சங்க மாவட்ட கவர்னர் சந்திரமோகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.